**கம்பளை நகர சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்நிதிக்கூற்றுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2018 ஜுலை 02 திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உகுவெல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபளிக்கிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு பொருட்கள் மெய்மை ஆய்வு அறிக்கை விதிந்துரைகளின் பிரகாரம் பாராதீனம் செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 65,044 ஆன போதும், ரூபா 3,257,730 தொகை கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா 3,192,686 குறைத்து காட்டப்பட்டன.

(ஆ) முன்னைய ஆண்டில் அம்புலுவாவ பசுமை ஓடுபாதை நிர்மாணத்திற்காக ரூபா 2,300,000 ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 1,205,699 ஆன செலவு மேற்கொள்ளப்பட்டதுடன், ரூபா 2,300,000 தொகை மீளாய்வாண்டிலும் கடன்படுனர் மற்றும் கடன் கொடுனராக கணக்கிடப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு கடன்படுனர் கூட்டுப்பெறுமதி ரூபா 314,721 இனால் கூடுதலாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு கடன்கொடுனர் கூட்டுப்பெறுமதி ரூபா 495,046 இனால் கூடுதலாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 2,575,851 இனால் குறைத்து மூலதனமாக்கப்பட்டிருந்தன.

(ஊ) ஜர்னல் குறிப்பு 51 பிரகாரம் களஞ்சிய பதிவேட்டின் பெறுமதி ரூபா 37,068 ஆன போதும் அது பொது பதிவேட்டில் ரூபா 196,498 என குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ) திரட்டு நிதியக் கணக்கு செலவு கூட்டுத்தொகை ரூபா 4,086,147 ஆன போதும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,027,972 என குறிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 58,175 குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலவிய ரூபா 289,851 பெறுமதியான 07 வைப்புகள் நிதிக்கூற்றுகளின் விடுபட்டிருந்தன.

(ஒ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு களஞ்சியத்தில் இருந்த ரூபா 10,075 பெறுமதியான 03 அச்சு உறுப்படிகள் இறுதி இருப்பிற்கு உட்படுத்தப்படவில்லை.

(ஓ) வருடாந்த நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 102,639 கூடுதலாக கணக்கிடப்பட்டதன் காரணமாக பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 102,639 கூடுதலாக நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

1.3.2 **எதிர்பாராத பொறுப்புகள்**

பல் வேறு காரணங்களுக்காக சபை மூலம் தாக்கல் செய்யப்பட்ட 07 வழக்குகள் மற்றும் முன்னர் வழங்கப்பட்ட வழக்குத் தீர்புகளுக்காக வெளித் தரப்பினரால் செய்யப்பட்ட 05 மேல் முறையீட்டு வழக்குகள் மீளாய்வாண்டு முடிவிலும் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த போதும், நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

1.3.3 **இணக்கஞ் செய்யப்படாத் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 49,240,508 ஆன 2 கணக்கு மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிற்கிடையில் ரூபா 2,713,836 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

1.3.4 **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய 6 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 94,554,363 ஆனதுடன், அவற்றின் ஓராண்டு காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 64,789,879 ஆக இருந்தது.

(ii) மின்சார சபையிடமிருந்து பெற வேண்டிய ரூபா 42,063,401 ஆன மீதியை தீர்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) கழிவகற்றும் பிணை கட்டணமாக வழங்கப்பட்ட ரூபா 25,000 ஆன பணம் தற்போது கழிவகற்றல் மேற்கொள்ளப்படாமையினால் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iv) 2011 ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 35,000 ஆன முற்பணம் மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(அ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய 3 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 42,078,560 ஆனதுடன், அவற்றின் ஓராண்டு காலத்தை விஞ்சிய மீதிகளிலின் பெறுமதி ரூபா 16,634,642 ஆனது.

(ii) ஆசியா அபிவிருத்தி வங்கி கடனுக்காக செலுத்த வேண்டிய ரூபா 497,132 ஆன மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தன.

1.3.5 **கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 46,533,202 ஆன 05 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது.

1.3.6 **இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், முகாமைத் தீர்மானங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், முகாமைத் தீர்மானங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1988 நகர சபை அதிகார சட்டத்தின் 36 (உ) பிரிவு | - | சபைக்கு சொந்தமான வழக்கறிஞர் கட்டிடத் தொகுதி, இ.போ.ச பஸ் தரிப்பிட கடைத்தொகுதி மற்றும் கம்பளை புகைரத பாதைக்கு மேலாக உள்ள வியாபார கட்டிடத்தொகுதி நிர்மாணங்களிற்காக சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடம் வாடகைக்கு வழங்குகையில் விடைய அமைச்சரின் முன் கூட்டிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2008 ஜனவரி 25 திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 2000 இலக்கம் 53 மற்றும் 1988 இலக்கம் 56 கொண்ட சுற்றாடல் சட்டம். | | சபை அதிகார எல்லையில் சுற்றாடல் அனுமதிபத்திரம் பெறப்பட வேண்டிய 131 நிருவனங்களுக்கு அனுமதிபத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2010 பெப்ரவரி 03 திகதிய இலக்கம் ஆர்/டீ/1/4/43 கொண்ட ஜனாதிபதி செயலாளரின் அரச காணி முகாமை தொடர்பான சுற்றறிகையின் 3.5 பிரிவு மற்றும் நகர சபை அதிகார சட்டத்தின் (உ) (ii) பிரிவு | | உள்ளூராட்சி நிர்வனம் ஒன்றிற்கு ஒப்படைக் கட்டலை ஒன்றின் மூலம் அல்லது வேறு வகையில் ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகளின் மூல உரிமை அரசிற்கு உரித்தாவதுடன், அவ்வாரான காணி ஒன்றை மூன்றாம் தரப்பினருக்கு வழங்குவதற்கு உள்ளூராட்சி நிர்வனங்களுக்கு அதிகாரம் இல்லாத போதும், கம்பளை நகர சபை அதிகாரிகள் சபை தீர்மானம் மூலம் காணி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர். |
| (ஈ) | 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/3 கொண்ட உள்ளூராட்சி ஆணையாலரின் சுற்றறிக்கையில் | | |
| | (i) 1 ஆம் பந்தி | 96,226,998 | பொதுச் சந்தை கடையறை கட்டிடத்தொகுதியின் கடையறைகளிற்காக ஒரே முறையில் செலுத்தும் டென்டர் பணம் அறவிடாததன் காரணமாக ஆரம்பத்தில் மற்றும் 2016 ஆண்டில் டென்டர் செய்யயப்பட்ட கடையறைகளிலிருந்து ஒரே முறையில் செலுத்தும் பணத்தை அறவிட்டிருக்கவில்லை. |
| | (ii) (04) ஆம் பந்தி | - | பொதுச் சந்தை தொகுதியில் இலக்கம் 70 முதல் 80 வரையான கடை அறைகளை டென்டர் செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்த போதும் வியாபார நடவடிக்கை செய்யாது மூடப்பட்டிருந்ததுடன், வாடகை பணம் அறவிடுவதற்கு பில் இடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | 04 (1) பிரிவு | நிலுவை கடையறை வாடகைக்காக தாமதக் கட்டணமொன்று அறவிட வேண்டிய போதும், கடை அறை வாடகை தாமதத்திற்காக அவ் அறிவுரைகளை பின்பற்றி இருக்கவில்லை. |
| (iv) | 10 பந்தி | குத்தகைகாரர்களால் கடை அறைகளை ஏனைய தரப்பினர்களுக்கு உப குத்தகை வளங்கப்பட்டு ஒரே முறையில் செலுத்தும் பணத்துடன் கூடுதலான வாடகை பணமும் அறவிட்டிருந்த போதும், சபைக்கு செலுத்த வேண்டிய வாடகை பணத்தை செலுத்தியிருக்கவில்லை. |
| (v) | 12 ஆம் பந்தி | குத்தகைகாரருக்கு அனுமதியின்றி கடையறைகளின் தோற்றத்தை மாற்றம் செய்ய இயலாததுடன், நடைபாதை வியாபாரத் தொகுதியில் 02 மாடிகளுடன் கூடிய 06 ஆம் இலக்க கடையறையின் மேல் மாடிக்கு உற்பிரவேசிக்க உள்ள படிக்கட்டுகளை உடைத்து அகற்றி தனி மாடியாக பயன்படுத்தப்படுகிறது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 26,726,508 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 52,092,129 ஆனது.

### 2.2 நிதி கட்டுப்பாடு

(அ) 5 முதல் 12 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கான ரூபா 569,500 பெறுமதியான மறுக்கப்பட்ட காசோலைகள் காணப்பட்ட போதும் அதற்கு பணம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சம்பத் பியச நிலையத்தில் பொறுப்பாளராக சேவையில் ஈடுபடுத்தியிருந்த காவற்காரரிற்கு 2017 ஆண்டில் பழைய பொருட்கள் கொள்வனவிற்காக முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டி தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான மூலம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் குத்தகை வாடகை | 3,190,000 | 63,788,716 | 30,823,412 | 49,005,556 | 31,800,000 | 31,220,467 | 35,750,114 | 46,721,088 |
| வாடகை | 9,209,000 | 10,971,699 | 8,052,966 | 13,748,091 | 13,355,000 | 8,336,018 | 7,024,221 | 10,829,358 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 550,000 | 2,959,154 | 2,959,154 | - | 2,775,000 | 2,668,976 | 2,668,976 | - |
| ஏனைய வருமானம் | 36,248,457 | 9,064,551 | 29,697,547 | 3,032,358 | 51,498,457 | 48,693,104 | 33,479,598 | 15,315,505 |
| | 49,197,457 | 86,784,120 | 71,533,079 | 65,786,005 | 99,428,457 | 90,918,565 | 78,922,909 | 72,865,951 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்ததமான கடை அறைகளை குத்தகைக்கு வழங்கும் போது ஒரே முறையில் அறவிடும் பணம் (Key money) உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படாமையினால் சபைக்கு கிடைக்க வெண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்கு சொந்தமான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்படாமல் மற்றும் டென்டர் நடைமுறை பின்பற்றப்படாமல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

### 2.3.3 வீத வரி மற்றும் வாடகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 42,126,439 ஆன நிலுவை மீதியொன்று நிலவிய போதும் ஆண்டினுள் அவற்றில் ரூபா 10,716,237 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. ரூபா 31,570,400 ஆன வருடாந்த பில் இடலின் ரூபா 7,585,975 மாத்திரம் ஆண்டினுள் அறவிடப்பட்டிருந்ததுடன், அது மொத்த பில் இடலின் 24 சதவீதமான குறை பெறுமானமானது. மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதிக்கு மொத்த வீத வரி நிலுவை 44,965,309 ஆனது.

(ஆ) பல வருடங்களாக முன்கொண்டு வரப்பட்ட வீத வரி நிலுவையை அறவிடுவதற்காக நகர சபை அதிகார சட்டத்தின் 170 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 வாடகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 10,829,358 நிலுவையான கடையறை வாடகை மீதியில், ஆண்டின் போது ரூபா 1,586,798 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அது மொத்த நிலுவை மீதியின் 14 சதவீத பெறுமானமானது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 11,600,704 ஆனதுடன்

அம்மீதியினுள் 1 ஆண்டு முதல் 5 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 9,242,560 காணப்பட்டது.

(ஆ) வழக்கறிஞர் அலுவலக கட்டிடத்தொகுதியிற்கு ரூபா 304,589 ஆன மாதாந்த குத்தகை வாடகை நிலுவை ஒன்று நிலவியது.

2.3.5 **ஏனைய வருமானம்**

(அ) **விடுதிக் கட்டணம்**

மீளாய்வாண்டு திசம்பர் 31 திகதியன்று விடுதிக் கட்டண நிலுவை மீதி ரூபா 856,950 ஆனதுடன், அம்மீதியினுள் ஓராண்டிற்கு முன்னரிலிருந்து நிலவி வரும் ரூபா 24,607 காணப்பட்டது.

(ஆ) **பொது மலசல கூட கட்டணம்**

பல ஆண்டுகளாக முன் கொண்டுவருப்படும் பொது மலசல கூட கட்டண மீதி ரூபா 1,375,453 ஆனதுடன், அம் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.6 **நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 30,549,410 ஆனது.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

நகர சபை அதிகார சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் பொது நலன், வசதிகள் மற்றும் நலன் புரி போன்ற சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

**(அ) துணைச் சட்டம்**

நகர சபை அதிகார சட்டத்தின் 157 பிரிவின் கீழ் 15 பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்ள துணைச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டிய போதும் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் 7 விடயங்களிற்கு மாத்திரம் துணைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) செயல் நடவடிக்கை திட்டம்**

அமுல்படுத்தப்பட்ட துணைச் சட்டத்தின் படி சபை மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த 4 செயற்பாடுகளிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஒதுக்கீடு செய்யப்படாமை**

தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் சபை மூலம் மேற்கொள்ள வேண்டியிருந்த 38 செயற்பாடுகளில் 29 இற்கு மாத்திரமே வருடாந்த வரவு செலவு திட்டம் மூலம் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக 09 செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருந்தன.

**(ஈ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை**

செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள ரூபா 2,000,000,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு

மட்டத்தினை (out put) அடைந்து கொண்டிருக்கவில்லை. விபரம் கீழ் குறிப்பிடப்படுகின்றன.

| செயற்பாடு | மேற்கொள்ளப்பட்ட அளவின் பெறுமதி | அவதானங்கள் |
|---|---|---|
| | ரூபா | |
| பொதுச் சந்தை கட்டிட நிர்மாணம் | 2,000,000,000 | 3 மாடிகளை கொண்ட பொதுச் சந்தை கட்டிடமொன்றை நிர்மாணிக்க திட்டமிட்டு 2 மாடிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. திட்டமிடல் பலவினம் காரணமாக அவ் இரண்டு மாடிகளுக்கும் கூட குறை பயன்பாட்டில் நிலவின. இக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 13 ஆண்டுகள் கடந்திருந்தும், மேல் மாடியை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படாததுடன், கொன்கிரீட் பகுதிகள் வெடித்து அவ்விடங்களினால் மழை நீர் கசிந்திருந்தது. |

**(உ) எதிர்பார்த்த விளைவுகளை (out come) பெற்றுக் கொள்ளாமை**

பொதுச் சந்தையை நிர்மாணிக்க ரூபா 2,001,374,926 செலவிட்டு எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்திருந்த போதும் எதிர்பார்த்த இலாபங்களை அடைந்திருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

| செயற்பாடு | மேற்கொள்ளப்பட்ட அளவின் பெறுமதி | அவதானங்கள் |
|---|---|---|
| | ரூபா | |
| பொது சந்தை கடை அறைகள் குத்தகைக்கு வழங்குதல் | 2,001,374,926 | டேன்டர் மூலம் குத்தகைக்கு வழங்கப்பட்ட 102 பொதுச் சந்தை கடைறைகள் வியாபார நடவடிக்கைகள் ஏதுமின்றி மூடப்பட்டிருந்ததுடன், மூடிவைக்கப்பட்டிருந்த கடைறைகள் பல்வேறு துர் நடத்தைகளுக்காக பயன்படுததப்பட்டிருந்தன. மேலும், இலக்கம் 112 முதல் 134 வரையான கடை அறைகளை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்காது மூடிவைக்கப்பட்டிருந்தன. |

**(ஊ) செயற்பாடுகளை மேற்கொள்வதன் தாமதம்**

பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்பாடு | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2017 திசெம்பர் 31 திகதிக்கு செலவு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| குடமாகே நகர சபை சிற்றூழியர் கிராமத்தில் ஒற்றையடி | 1,000,000 | 2017.12.15 | 387,691 | • அதிக மழை<br>• தளத்தில் நிலவும் அதிக அசுத்த நிலை<br>• வேலைத்தளத்தில் |

| | |
|---|---|
| பாதைகள் மற்றும் வடிகாள்களை கொன்கிரீட் இடல் | காணப்படும் பொருட்கள் பல நபர்களினாலும் எடுத்துச் செல்லப்படல் |

**(ஏ) கழிவுப் பொருள் முகாமை**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) சபை அதிகார எல்லையினுள் தினத்தோறும் ஒன்று சேறும் 20 டொன் அளவான கழிவுப் பொருட்களை முகாமை செய்வதற்கான முறையான வேளைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. குண்டசாலை பிரதேச சபையின் மற்றும் கண்டி மாநகர சபையின் இயற்கை பசளை தொட்டில்களிற்கு கழிவுப் பொருட்களை அனுப்புவதற்காக கழிவுப் பொருட் கட்டணமாக ரூபா 2,278,650 ஆன தொகை 2017 ஆண்டில் செலவிடப்பட்டிருந்தன.

(ii) அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட அறிக்கையொன்று இல்லாது ரூபா 3,325,195 செலவில் ''சம்பத் பியச'' கருத்திட்டம் ஆரம்பிக்கப்ட்டிருந்ததுடன், இதனூடாக உக்கலடையாத கழிவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. 2017 ஆண்டில் உக்கலடையாத 17808 கிலோ கிராம் கழிவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கமையினால் 10210 கிலோ கிராம் அளவான கழிவுப் பொருட்கள் மத்திய நிலையத்தினுள் ஒன்று சேர்த்திருந்தன.

**(ஏ) சுற்றாடல் பிரச்சினைகள்**

---

முன்னைய ஆண்டுகளில் அம்புலுவாவே உயிரியல் பல்வகை கட்டிடத் தொகுதியிற்கு குப்பைகளை வெளியேற்றி மற்றும் அவ்வப்போது மண் இடப்பட்டு மூடப்பட்டிருந்தன. குப்பைகள் இடப்பட்ட இவ்விடம் 2016 ஆண்டில் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களாள் ரூபா 3,433,500 இற்கு கிட்டிய இழப்பீடொன்றை கோரி மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முறைப்பாடொன்றை செய்திருந்தனர். அதன் பிரகாரம் பிரதேசத்தில் ஒன்று சேரும் கழிவுப் பொருட்களை மீள் சுழற்ச்சிக்கு உட்படுத்தாமல் சுற்றாடலுக்கு பாதிப்பேட்படும் வகையில் வெளியேற்றப்பட்டிருந்தன.

**(ஒ) நிலையான அபிவிருத்தி இலக்கு**

---

சபையினால் நிலையான அபிவிருத்தி நேக்கின் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிக்கவில்லை.

**3.2 மனித வள முகாமை**

---

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

---

(i) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான ஆளணி பரிசோதனையின் போது 12 ஊழியர் மிகையும் 32 ஊழியர் வெற்றிடங்களுகம் நிலவின.

(ii) சுகாதார பிரிவில் அங்கீகரிக்கப்ட்ட ஊழியர் எண்ணிக்கை பிரகாரம் சிறு நிர்வாகத்தர் எண்ணிக்கை 03 ஆன போதும், 07 நபர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், இச் சிறு நிர்வாகத்தர்களுக்கு மேலதிகமாக சுகாதார தொழிலாளர் சேவையின் 08 ஊழியர்கள் சிறு நிர்வாக பதவிக்கு இணைக்கப்பட்டு 2017 ஆண்டிற்காக ரூபா 1,670,832 சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. இவ்

ஊழியர்களுக்கு தினத்தோறும் உரிய வேலை நேரத்தினுள் மேற்கொள்ள போதிய கடமைகளும் சுமத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) அங்கீகரிக்கப்பட்ட அலுவலக வேலை உதவியாளர் பதவி 06 ஆன போதும், 10 நபர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக பாதை மற்றும் சுகாதார தொழிலாளர் பதவி வகிக்கும் 07 ஊழியர்கள் அலுவலகத்தில் நிருத்தப்பட்டிருந்தனர்.

**(ஆ) ஊழியர் கடன்**

---------------------

(i) இடமாற்றம் பெற்று வந்த அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 361,485 ஆன கடன் தவணைகள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்காது ஓராண்டு காலம் முதல் கணக்குகளில் நிருத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ii) ஆண்டு 01 முதல் 17 ஆண்டு வரையான கால எல்லைக்குள் 23 அலுவலர்களிடமிருந்து அறவிடப்படாது நிலவும் ரூபா 467,870 ஆன ஊழியர் கடன் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான பொதுச் சந்தையில் 05 கடைறைகளை மீன் வியாபாரத்திற்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கு டென்டர் நடைமுறைகளுக்கு மாற்றமாக வழங்கப்பட்டிருந்தன. இக்கடையறைகளை குத்தகைக்கு வழங்குகையில் முற்பணத்தை ஒரே முறையில் அறவிடாது 60 தவனைகளில் செலுத்த இடமளிக்கப்பட்டதனால் 2018 ஜனவரி 19 திகதிற்கு குத்தகைக்கு வழங்கி 05 ஆண்டுகள் கடந்திருந்த போதும், ரூபா 4,140,521 ஆன முற்பணம் மற்றும் புதிய மதிப்பீட்டிற்கமைய கடையறை வாடகை ரூபா 468,000 தொகை அறவிடப்படாது இருந்தன.

(ஆ) இ.போ.ச பஸ் நிலையத்திற்கு அருகில் கடை கட்டிடத் தொகுதியில் முழு மதிப்பீட்டின் 1/3 பகுதி நகர சபைக்கு அறவிட வேண்டியதாக உடன்பட்டிருந்த போதும், உடன்படிக்கை பிரகாரம் வாடகை அறவிடப்படாததனால் மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதிக்கு ரூபா 1,114,747 ஆன பணம் நகர சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) சபைக்கு சொந்தமான கடையறை வாடகையினை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டிய போதிலும், பொது அங்காடி கட்டிடத்தொகுதியின் கடையறைகளை இறுதியாக 2008 ஆண்டிளேயே மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததனால் நகர சபையிற்கு பெற வேண்டிய பெறுமளவு வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) நடைபாதை வியாபார கட்டிடத்தொகுதியின் மேல் மாடியினை, கீழ் மாடியை குத்தகைக்கு பெற்ற குத்தகைக் காரர்களுக்கே குத்தகை பெறப்படாமல் பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தன.

(உ) நகர சபைக்கு சொந்தமான காணியொன்றில் மற்றும் கட்டிடமொன்றில் காணப்படும் 21 வழக்கறிஞர் அலுவலகங்களை குத்தகைக்கு வழங்கும் போது வாடகை மதிப்பீடு செய்யாது 2006 ஆண்டில் ரூபா 500 இற்கும், 2011 நவம்பர் 24 திகதி முதல் மகா சபை தீர்மானமொன்றின் மூலம் ரூபா 1000 வீதம் அறவிட தீர்மானிக்கப்பட்டு ரூபா 750 மாதாந்த வாடகை அறவிடப்பட்டதன் காரணமாக ரூபா 378,000 பணம் சபை நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. 15 வழக்கறிஞர் அலுவலகங்களின் 10 வருட ஒப்பந்த காலம் 2016 ஜனவரி 30 திகதியுடன் முடிவடைந்திருந்த போதும், ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நகர சபையிற்கு சொந்தமான காணி குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக 19 குத்தகைக் காரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ஒரே முறையில் செலுத்தும் ரூபா 6,914,102 தொகை மற்றும் 112 குத்தகைக் காரர்களிடமிருந்து ரூபா 1,776,059.50 ஆன வருடாந்த குத்தகை வாடகை அறவிடப்படவில்லை. இக்காணியை குத்தகைக்கு வழங்குகையில் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை தொகையை திருத்த அல்லது நகர சபை அதிகார எல்லையில் குத்தகை மதிப்பீட்டு தொகையினை 50 சதவிதத்தால் அதிகரித்து குத்தகை பணத்தை திருத்துவதற்கு ஏனும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) பொது அங்காடி கடைறைகளிலிருந்து அறவிட வேண்டிய மாதாந்த வாடகையும் சபையினால் முறையாக அறவிடப்படாததனால் மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதிக்கு ரூபா 13,139,179 ஆன பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஏ) கம்பளை புகையிரத பாதையிற்கு மேல் நிர்மாணிக்கப்பட்டுள்ள அங்காடி கட்டிடத்தொகுதியிலிருந்து 2005 முதல் 2017 ஆண்டு வரையான காலத்திற்கு ரூபா 9,193,568 ஆன கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஐ) 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சபை சொத்துக்கள் மதிப்பிடப்பட வேண்டிய போதும், 2008 ஆண்டு மதிப்பீட்டின் பிரகாரம் 2017 ஆண்டிலும் வீத வரி அறவிடப்பட்டிருந்தது. 2008 முதல் இது வரையும் அதிகார எல்லை பெறுமளவில் வளர்ச்சியடைந்திருந்த போதும், சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு வீத வரி புதிப்பிக்கப்படாததனால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற/குறை பயன்பாட்டு சொத்துக்கள்

மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 3,835,220 பெறுமதியான 6 வகையான சொத்துக்கள் விளைவற்று மற்றும் குறை பயன்பாட்டுடன் நிலவின.

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டினுள் ரூபா 16,492,573 ஆன மூலதன செலவு மேற்கொள்ளப்பட்ட போதும், சபை மூலம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

# 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவின விடயங்களிற்கிடையில், ஒதுக்கீடு மாற்றப்பட்ட பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிற்கிடையில் கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 20 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 10,950,000 ஆன ஒதுக்கீட்டிலிருந்து எவ்வித செலவும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 34 செலவின விடயங்களில் தேறிய ஒதுக்கீட்டிற்கும் உள்ளவாரான செலவிற்கும் இடையில் 14 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சலவு முரன் நிலவியது.

(இ) 11 வருமான விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட ரூபா 24,260,000 ஆன வருமானத்திலிருந்து எவ்வித வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 13 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாரான வருமானத்திற்கு இடையில் 19 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சலவு முரன் நிலவியது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதும், சபையின் எல்லாப் பிரிவுககளும் உள்ளடங்கும் வகையில் கணக்காய்வினை மேற்கொள்ளும் கால எல்லை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆண்டினுள் 11 கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்த போதும், சபையின் எல்லா பிரிவுகளும் உள்ளடங்கப்படும் வகையில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய மத்திய மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் இலக்க சீபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 கொண்ட கடிதம் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நியமிக்கப்பட்ட போதும், மீளாய்வாண்டினுள் 02 குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | (i) காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மை ஆய்வு செய்யப்படாமை. |
| | (ii) காணிகள் முறையான அங்கீகாறமின்றி குத்தகைக்கு வழங்கல். |
| (ஆ) கணக்கீடு | (i) சபைக்கு சொந்தமான எல்லா சொத்துக்கலையும் இனங்கண்டு கணக்கிடப்படாமை. |
| | (ii) இறுதி இருப்பினை சரியாக கணக்கிடாமை. |
| | (iii) பெறப்பட வேண்டிய வருமானங்கள் சரியாக கணக்கிடப்படாமை. |
| (இ) நிதி மற்றும் வங்கி நடவடிக்கைகள் | (i) மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) வாகன கட்டுப்பாடு | (i) ஓட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்களை பாராதீனம் செய்யாமை. |
| | (ii) வாகன இழப்புகள் தொடர்பாக நிதிப் |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | வருமான கட்டுப்பாடு | (i) | கடையறைகளின் வாடகை மதிப்பீடு செயற்படுத்தப்படாமை. |
| | | (ii) | காலத்திற்கேற்ப வீத வரி குத்தகை மதிப்பிடப்படாமை. |
| | | (iii) | நிலுவை வருமானத்தை அறவிட முறையான நடைமுறைகள் எடுக்கப்படாமை. |
| (உ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | (i) | கடன்பட்டோர் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (iii) | கடன்பட்டோர் உறுதிப்படுத்தல் பெறப்படாமை. |